4. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்புகள்—தொடர்ச்சி

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நாங்கள் பல்வேறு பிரச்சினைகளை இங்கே எழுப்பியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், நிகழ்ச்சிக்கு நடுவில் நிற்கிறோம்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.** (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் விளக்கமாகச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.ஆர். பி. அவர்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், பதில் சொல்லுங்கள்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: இல்லை, இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5-11-2003 நிலவரப்படி... (குறுக்கீடு)

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: நியாயம் இல்லை. முதலமைச்சர் அவர்கள் சொல்லுங்கள் என்று சொல்கிறார்கள். அதனால் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.